சார்பு நீதிமன்றம், குளித்தலை

O.S.No.

I.A.No.

MCOP.NO.380/2014

I.A.No.

HMOP.NO.

வாதி / பிரதிவாதி ம.சா.1 வது சாட்சி உதவியாளர் திரு.சுப்பிரமணியன் அவர்களால் 44/1969 பிரிவின்படி 02.08.2019 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :வெங்கட்ரமணா | கிராமம் | :மருதூர் |
| த/பெ | :நாகராஜு | தாலூக்கா | :குளித்தலை |
| மதம் | :இந்து | தொழில் | : – |
| ஜாதி | :டோபி | வயது | :44 |

மு.வி.

நான் இந்த வழக்கின் மனுதாரர் ஆவேன். மனுதாரர் தரப்பு 1 வது சாட்சியாவேன். எனது தரப்பு முதல் விசாரணையை பிரமாண பத்திரமாக தாக்கல் செய்கிறேன். பாடாலூர் காவல்நிலைய கு.எண்.628/2009 ன் முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1. டிஸ்சார்ஜ் சம்மரி ம.சா,ஆ.2. மருத்துவ கட்டண ரசீதுகள் ம.சா.ஆ.3 வரிசை எண்ணிக்கை கொண்டது. மனுதாரருக்கு வழங்கிய ஊனச்சான்றிதழ் ம.சா.ஆ.4. அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. ஆகியவற்றை எனது தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கு.வி.

விபத்து சமயத்தில் நான் பேருந்தை ஓட்டிச்சென்றேன் என்றால் சரிதான். பாடாலூர் போலீசார் என் மீது தான் வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். எனக்கு முன்னாள் சென்ற லாரியை முந்துவதற்கு முயற்சி செய்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் முந்துவதற்கு முயற்சி செய்ததால் தான் என் மீது வழக்கு பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எனக்கு முன்னாள் சென்ற லாரி திடீரென்று நின்றுவிட்டதால் தான் அந்த லாரிமீது மோதிவிட்டதாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் விபத்தின்போது 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் ஓட்டுனராக பணிபுரிந்ததால் இழப்பீடு பெறவேண்டுமென்றால் வேலையாள் இழப்பீட்டுச்சட்டம் விதிகளின் கீழ் பெறவேண்டுமென்றும், மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் பெற முடியாது என்றால் சரியல்ல. நான் ஆந்திரா மாநிலம் போக்குவரத்து பிரிவில் எனக்கு ஏற்பட்ட ஊனத்தின் சதவீதம் 90

சதவீதம் என்று குறிப்பிட்டுள்ளது பொய்யாக தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு அதிகமானது என்றால் சரியல்ல.

ஒம்/வெங்கட்ரமணா,
ஒம்/C.ஸ்ரீதர்,
சார்பு நீதிபதி,
குளித்தலை.